மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கொற்கை பஞ்சாயத்தையும் தாழஞ்சேரி பஞ்சாயத்தையும் இணைக்கின்ற அய்யாவையனாற்றுப் பாலம் கட்டுவதற்கு 1971-ம் ஆண்டு திட்டம் தயாரிக்கப் பட்டு, 2—3—1972-ல் அது ஒப்பந்தக்காரர்களுக்கு விடப்பட்டது. ஒப்பந்தக் காரர்கள் அந்த உடன்படிக்கையின்படி செயல்படவில்லை. இதற்கிடையில் மார்க்கெட்டிங் காம்ப்ளெக்ஸ்-ன் கீழ் இந்த வேலையை எடுத்துக்கொள்ளலாம் என்று யோசித்து முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால், மத்திய அரசு இந்தப் பால வேலையை எடுத்துக் கொள்ளக்கூடாது என்று உத்தரவிட்டதன் காரணமாக, அது எடுத்துக்கொள்ளப்படவில்லை. அது அவசியம் என்று கருதியதினால் மாயூரம் ஊராட்சி ஒன்றியமே இந்த வேலையை மீண்டும் எடுத்துச் செய்யலாம் என்று அறிவுறுத்தப்பட்டிருக்கிறது. இதற்கான திருத்த மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு ஊராட்சி ஒன்றிய ஆய்வாளர் ஊராட்சி ஒன்றியப் பொறியாளரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். மாவட்ட வளர்ச்சி அலுவலரும் இதுபற்றி நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு வேண்டிய நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது.

சென்னை-கம்பம் விரைவுப்பேருந்து

*834 வினா—திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்விலுள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே திண்டுக்கல் வழியாக துரித வண்டி விடும் செயற்குறிப்பு ஏதும் பரிசிலனையில் இல்லை.

திரு. ஏ. எம். டி. நாச்சியப்பன்: சென்னைக்கும் கம்பத்திற்கும் இடையே துரித பஸ் இல்லாமல் அந்தப் பகுதி மக்கள் கஷ்டப்படுகிறார்கள். மேலும் சென்னையிலிருந்து திண்டுக்கல் செல்லவேண்டும் என்றால் பஸ்கள் அதிகமாக இல்லை. சென்னையிலிருந்து மதுரை நகரத்திற்குச் செல்லக்கூடிய பஸ்களெல்லாம் திருச்சி மேலூர் வழியாக செல்லுகின்ற காரணத்தினால் சென்னையிலிருந்து திண்டுக்கல் கம்பத்திற்கு ஒரு பஸ் விட்டால் ஏதுவாக இருக்குமே? அதற்கு ஏற்பாடு செய்வார்களா?

1974 ஏப்ரல் 15]

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, அந்தப் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருந்து, நீண்டநாட்களாக அந்தப் பகுதியினர் கேட்டுக் கொண்டதற்கு இணங்க அந்தச் சாலை வேலை இப்போது துவங்கப்பட்டு இருக்கிறது. எனவே அந்தப் பகுதியில் உள்ள நிலைமையைக் கருதி, இன்னும் ஆங்காங்கு விடப்பட்டிருக்கும் அந்தப் பகுதிகளையும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியையும் இணைத்து அந்தப் பகுதிகளுக்கும் கப்பிச் சாலையாக அமைத்திட அரசு ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : நிதிப் பற்றுக்குறை காரணமாக உடனடியாக எடுத்துக்கொள்ள இயலவில்லை.

திரு. க. மு. இராசகோபால் : தலைவர் அவர்களே, உள்ளாட்சித் துறையிலே கொடுக்கப்பட்டிருக்கிற பணம் போதாத காரணத்தினால் பல இடங்களில் இருக்கின்ற நகர்ப்புறங்களை இணைக்கின்ற பாதைகள், தாம்போதிகள் இன்னும் சரிவர கட்டப்படாமல் சிற்றூர்களெல்லாம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. ஆகையினால் பொதுப் பணித் துறையில் எடுத்துக்கொண்டு நடத்துவதற்கு நம்முடைய உள்ளாட்சித் துறை சிபார்சு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சிபார்சு செய்வதில் ஒன்றும் ஆட்சேபணை இல்லை. எடுத்துக்கொள்ளத்தான் ஆட்சேபணை.

அய்யாவையனாற்றின் குறுக்கே பாலம்

*833 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மாயூரம் தொகுதியில் கொற்கை பஞ்சாயத்தினையும், தாழஞ்சேரி பஞ்சாயத்தினையும் இணைக்க அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே பாலம் கட்டும் வேலை எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இவ்வேலையைச் செயலாக்கும் நிலை ஆரம்பக் கட்டத்தில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : கொற்கை, தாழஞ்சேரி பஞ்சாயத்துக்களை இணைக்கின்ற அய்யாவையனாற்றுக்குக் குறுக்கே கட்டப்படும் பாலத்திற்கு இரண்டு முறைகள் டெண்டர் கோரப்பட்டும் இதுவரையில் டெண்டர் கேட்பவர்களிடமிருந்து டெண்டர் வராத நிலையை நான் உணர்கிறேன். எனவே, அதற்கு டிபார்ட்மெண்ட் மூலமாகவோ அல்லது வேறு ஏதாவது ஒரு முறையிலோ அந்தப் பாலத்தினைக் கட்டி முடிப்பதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா?